**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. No. 110-2024**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | நித்ய செல்வகுமாரி (RW1) | Date : | 02.09.2025 |
| Husband Name | : | ஜெயசீலன் | : | |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தரங்கம்பாடி தாலுக்கா, அன்னவாசல் கிராமத்தில் வசித்தேன். தற்போது தரங்கம்பாடி தாலுக்கா, எருக்கட்டாஞ்சேரி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு எதிராக கார்த்திகேயன் என்பவர் காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்துள்ளார். ஆனால் , அந்த காரத்திகேயனை யார் என்றே தெரியாது. நான் அவரிடமிருந்து எந்த கடனும் பெறவில்லை. எந்த காசோலையும் கொடுக்கவில்லை. கடந்த 2018 ம் ஆண்டு விமல் என்பவரிடம் மூங்கில் தோட்டத்தை சேர்ந்த வினோத் மூலமாக ரூ. 1,50,000/– கடன் பெற்றேன். மேற்படி கடனுக்காக விமல் என்பவரிடம் எனது செம்பனார்கோவில் State Bank ன் 2 காசோலைகளை கொடுத்தேன். நான் விமல் என்பவரிடம் வாங்கிய கடன் தொகை முழுவதையும் அவரிடம் கொடுத்துவிட்டேன். நான் கடன் தொகையை விமலிடம் திருப்பி செலுத்திய விபரம் அன்னவாசல் கிராமத்தை சேர்ந்த ஞானசேகரன் என்பவருக்கு தெரியும். நான் பணத்தை திருப்பி கொடுத்துவிட்டு விமலிடம் எனது காசோலைகளை கொடுக்கும்படி கேட்டேன். அதற்கு அவர் அவரது பீரோவில் உள்ளது என்றும், அதை தேடி எடுத்து தருவதாகவும் கூறினார். ஆனால், அவர் கொடுக்கவில்லை. எனக்கு குடும்பத்தில் வேறு பிரச்சனைகள் இருந்ததால் அந்த காசோலைகளை கேட்காமல் விட்டுவிட்டேன். 2021 ம் ஆண்டு கார்த்திகேயன் என்பவர் அவரிடம் நான் காசோலை கொடுத்து மோசடி செய்ததாக கூறி அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன். தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் கார்த்திகேயன் என்பவரிடம்

எந்த பணமும் வாங்கவில்லை. அவர் எனக்கு எதிராக பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனவே, இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.